1970 மார்ச் 14]

புதூர் என்ற ஊரில் வாழும் அரிசன மக்கள் குடியிருப்புக்கு அந்த ஊரில் உள்ள S. E. 200/1-A என்ற புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தரப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மந்தை புறம்போக்கு நிலம் என்று வகைப்படுத்தப்பட்ட 1200/2 நில அளவை எண்ணுள்ள (கேள்வியில் சொல்லியுள்ளதைப் போல் எஸ்.எப்கு 200/1-ஏ அல்ல) 2.31 ஏக்கர் பரப்பளவில், 0.87 ஏக்கர் பரப்பளவு நிலம் நத்தம் புறம்போக்காக மாற்றப்படும். இந்த நிலம், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நாரைக்கிணறு புதூர் என்ற சிற்றூரில் வாழும், 15 அரிசன குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்துக்கு 3 செண்ட் வீதம் ஒப்படை செய்யப்படும்.

திரு. மு. முத்தையா: தலைவர் அவர்களே, இந்த வீட்டு மனை கோரி ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. ஆகையால், நமது அரசாங்கத்திற்கு அடிக்கடி மனுக்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அரிசன வெல்பேர் ஆபீசரிடம் நானும் நேரில் சொல்லியும் இருக்கிறேன். ஆகவே, கூடிய விரைவில் வீட்டு மனைப்பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல வருகிற அநேக மனுக்களைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்கள் மனுவில் குறித்திருந்த சர்வே நெம்பர் 200-1-ஏ என்பது இல்லை. அந்த சர்வே நம்பர் தனிப்பட்ட பட்டா நிலம். ஆகவே, கிராமத்திற்குப் பக்கத்தில் மேய்க்கால் புறம்போக்கு 1200/2 என்ற எண்ணுள்ள புறம்போக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு ஆராய்ச்சி செய்த பிறகு, அந்த மேய்க்கால் புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி, அந்தப் புறம்போக்கில் 2.81 ஏக்கர் நிலத்தில் 0.87 ஏக்கர் நிலம் நத்தமாக மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்திற்காக 3 செண்ட் வீதம் ஒப்படை செய்ய, 11 அரிசன குடும்பங்களுக்குக் கொடுத்தது போக, பாக்கியை மேய்க்கால் புறம்போக்காக வைத்துக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

விருத்தாசலத்திலுள்ள மண்டல அச்சகக் கட்டடம்.

*377 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலிருக்கும் அரசாங்க பிராந்திய அச்சகம் (Government Regional Press) இயங்கும் கட்டடத்திற்கு மாத வாடகை எவ்வளவு?

(இ) அரசாங்கத்தில் இதற்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) மாத வாடகை ரூ. 1,225.

(இ) விருத்தாசலத்திலுள்ள அரசு மண்டல அச்சகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வது குறித்து, தென் ஆற்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியுடன் கடிதப் போக்கு வரவு நடைபெற்று வருகிறது.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநில பிராந்திய அச்சகங்கள் வாடகைக் கட்டடங்களிலேயே இருப்பதால், விருத்தாசலம் போன்ற இடங்களில் அச்சகம் வைத்திருப்பதில் இடநெருக்கடி இருக்கிறது. ஆகையால், அரசாங்கமே கட்டடங்களைக் கட்டி எல்லாப் பிராந்திய அச்சகங்களையும் அந்தக் கட்டடங்களில் வைக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இப்பொழுது புதுக்கோட்டையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருச்சியில் வணிகத்துறை தொழில் பேட்டையில் கிளை அச்சகம் இயங்கி வருகிறது. மற்றவைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விருத்தாசலம் அரசாங்க பிராந்திய அச்சகம் அவசர அவசரமாகத் துவக்கப்பட்டதன் காரணமாக, அப்பொழுது அது காமாட்சி அம்மன் பஸ் சர்வீஸ் ஓனருடைய பஸ் ஷெட்டில் துவங்கி, தேர்தலுக்கு முன்னால், வாடகை அதிகம் தரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், அந்தக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் இருப்பதும், அந்தக் காரணத்தால் வேறு இடத்தை எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் அரசு அச்சகம் இருக்கும் இடம் மிகவும் மோசமாக இருக்கிறது என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே நான் சென்று பார்த்தேன். உள்ளபடியே அது அச்சகம் வைக்கத் தகுதியற்ற இடம் என்று உணர்ந்து உடனடியாக வேறு இடத்திற்கு அதை மாற்ற வேண்டும் என்று உத்தரவு இட்டு, அரசு அச்சகத் துறை, தென்னாற்காடு வருவாய்த்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு அதற்கானவை செய்து வருகிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த உத்தரவு எந்த மாதத்தில் இடப்பட்டது? எவ்வளவு காலதாமதம்? மிக மிக மோசமான இடமாக இருந்தால், உடனடியாக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

1970 மார்ச் 14]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏறத்தாழ மூன்று மாதங்களாக நடக்கிறது. மிக விரைவில் நடைமுறைக்கு வரும்.

கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

* 378 **வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைப் பராமரிப்புத் துறையின் திட்டங்களை மக்களுக்குப் புரியவைக்க சினிமா படங்கள், போஸ்டர்கள் மூலம் விளம்பரப் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரைப்படங்கள், சுவரொட்டிகள் முதலியவற்றின் மூலமாகக் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் இம் மாநிலத்தில் ஏற்கெனவே பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்பொழுது 'ஒயிட் லெக் ஹார்ன்', 'சீமைப் பன்றிகள்' போன்றவற்றை வளர்ப்பது பற்றிய தகவல்களைக் கிராம மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. விளக்கம் தர சினிமா படங்கள் அந்த வகையில் அமைக்கப் பட்டால், கிராம மக்கள் புரிந்து கொள்ள சௌகரியமாக இருக்கும். ஆதலால் அதைப் பரிசீலிக்குமா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். அரசாங்கத்தின் சார்பில் 23 ஆங்கிலப் படங்களும், 15 தமிழ்ப் படங்களும் கால்நடை வளர்ப்பு பற்றித் தயாரிக்கப்பட்டு, சென்னையிலும் மாவட்டங்களிலும், பொருட் காட்சிகளிலும், கருத்து அரங்குகளிலும் திரையிடப்படுகின்றன. வேறு வழியில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கால்நடைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசாங்க உதவியுடன் செயல் படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது நிறுத்தப்பட்டுவிட்டது. உடனடியாக அதை மறுபடியும் ஏற்பாடு செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி, திரைப்படம் பற்றியது. கால்நடை வளர்ப்பு பற்றியது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெல்லி கவுடர் . . .

சில உறுப்பினர்கள் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் பெயர் 'கருணாநாதன்' என்று மாற்றியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.